Judicial Form No. 53
(Sec Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, KRISHNAGIRI.

Calendar .. ..
Miscellaneous .. ..
Preliminary Register .. ..
Sessions .. .. STC. No.519 of 2021

PW -1

Time 11. 47 AM -12.40 PM

| | |
|---|---|
| Name | : திரு.சிவகுமார். |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

(Accused absent. Petition U/s. 317 Crpc filed and allowed)

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act X of 1969 (Central Act 44 of 1969 on the day 27th day of February 2025.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :

1. நான் ஹோண்டா சோரூமில் வேலை செய்கிறேன். நான் எதிரி பணம் கொடுத்ததாக சொல்லும் காலக்கட்டத்தில் என்ன வேலை செய்தேன் என்றால் அதே இடத்தில் வேலை செய்தேன். எனக்கு அப்போது எவ்வளவு சம்பளம் என்றால் ரூ.7,000/–. ரூ.7,000/– சம்பளம் போக வேறு வருமானம் உள்ளதா என்றால் இல்லை. ரூ.7,000/–யை வைத்து தான் குடும்பத்தை நடத்துகிறேனா என்றால் ஆமாம். ரூ.7,000/– குடும்ப செலவு போக சேமிப்பதற்கு வழி உண்டா என்றால் இல்லை. வேறு ஏதாவது சேமிப்பு தொகை அல்லது வங்கியில் நிரந்தர வைப்பீட்டு தொகை ஏதாவது வைத்துள்ளேனா என்றால் இல்லை.

2. வங்கியில் கடன் பெற்றோ அல்லது வேறு நபரிகளிடம் கடன் பெற்று கடன் அடைக்கும் சூழ்நிலை ஏதாவது உண்டா என்றால் இல்லை. இந்த வருமானத்தை தவிர்த்து என் மனைவி, பிள்ளைகள் மூலம் வேறு ஏதாவது வருமானம் என் குடும்பத்திற்கு உண்டா என்றால் இல்லை. எதிரிக்கு ரூ.8 லட்சம் கொடுத்தாக

சொல்லும் பணத்தை எப்படி கொடுத்தேன் என்றால் என்னுடைய அப்பாவின் ஓய்வு தொகை மற்றும் என்னுடைய நண்பர்களிடமிருந்து வாங்கிய பணம் ஆகியவற்றின் மூலம் கொடுத்தேன். எதிரிக்கு ரூ.8 லட்சம் கொடுத்ததாக சொல்லும் பணத்தில் என் அப்பாவுடைய ஓய்வு தொகை எவ்வளவு என்றும் என் நண்பர்களிடமிருந்து வாங்கிய தொகை எவ்வளவு என்றும் என்னுடைய வழக்கு ஆவணங்களான சட்ட அறிவிப்பு, புகார் மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகிய எதிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. என்னுடைய அப்பாவின் ஓய்வூதிய தொகை எவ்வளவு இருக்கும் என்றால் ரூ.4 லட்சம். ஓய்வூதிய தொகை பெற்றத்திற்கான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சிகளாக என்னுடைய தந்தையோ அல்லது பணம் கொடுத்ததாக சொல்லும் நண்பர்களையோ விசாரிக்கவேண்டும் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலத்தில் திருப்பூரில் தலைமை காவலராக பணிபுரிந்து வருவதாக சொல்லும் ரவிகுமார் எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் அண்ணியின் பெரியம்மா பையன்.

4. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் 3வது பத்தியில் எதிரி மற்றும் ரவிகுமார் ஆகியோர் வணிக நோக்கத்திற்காக என்னிடம் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அடிப்படையில் பார்க்கும் போது ரவிகுமார் மூலமாக தான் எதிரி எனக்கு அறிமுகம் என்றால் சரிதான். கடன் தொகை கேட்டதாக சொல்வதை எதிரிக்காக ரவிகுமார் கேட்டாரா அல்லது எதிரி கேட்டாரா என்றால் எதிரிக்காக ரவிகுமார் கேட்டார். அவர்கள் இருவரும் பிசினஸ் செய்யவேண்டும் என்று பணம் கேட்டார். இதை ரவிகுமார் தான் சொன்னாரா என்றால் ஆமாம்.

5. கடன் தொகையை எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் ரவிகுமார் தான் எதிரி என்னுடைய வீட்டிற்கு இரவு வந்தார். கடன் பெறுவதற்கு எதிரி, ரவிகுமாருடன் என் வீட்டிற்கு வந்ததாக என்னுடைய வழக்கு ஆவணங்களில் எங்கும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ரூ.8 லட்சம் கடன் தொகையை எந்த தேதியில் கேட்டார்கள் என்றும் நான் எந்த தேதியில் கொடுத்தேன் என்றும் சொல்ல முடியுமா என்றால் 2019ம் வருடம் செப்டம்பர் மாதம் கேட்டார்கள். 10 நாட்கள் கழித்து செப்டம்பர் மாதமே பணத்தை கொடுத்தேன். பணத்தை பெற்று எத்தனை மாதங்களுக்குள் கொடுப்பதாக சொன்னார்கள் என்றால் 8 மாதத்திலிருந்து 1 வருடத்திற்குள் லாபத்தில் வரும் பங்குடன் சேர்த்து வட்டியாக கொடுத்துவிடுவதாக இருவரும் சொன்னார்கள்.

6. என்னுடைய வழக்கு ஆவணத்தில் லாபத்துடன் சேர்த்து கொடுத்துவிடுவதாக சொல்லவில்லை என்றாலும் 1 வருடத்தில் கடன் தொகை திருப்பி செலுத்திவிடுவதாக சொன்னதாக தான் சொல்லியுள்ளேன் என்றாலும் சரிதான். பணம் கொடுக்கும் போது வேறு ஏதாவது ஆவணங்கள் புரோ நோட் அல்லது கடன் பத்திரம் வாங்கிக்கொண்டேனா என்றால் இல்லை. நம்பிக்கையின் பேரில் கொடுத்தேன். வழக்கு காசோலையை எந்த தேதியில் எங்கு வைத்து யார் முன்னிலையில் வாங்கினேன் என்றால் காசோலையை வசூலுக்கு போடுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக

கோயம்புத்தூரில் கவுண்டன் பாளையத்தில் உள்ள எதிரியின் வீட்டிற்கு சென்று வாங்கி வந்தேன். காசோலையை கொடுக்கும் போது என்னுடைய உறவினர் ரவிகுமார் இருந்தாரா என்றால் இல்லை. அவர் வேலையாக இருப்பதாகவும் போன் மூலம் எதிரியிடம் சொல்லிவிட்டதாகவும், என்னை சென்று வாங்கிக்கொள்ளும்படியும் சொன்னார்.

7. காசை கொடுக்காமல் அலக்கழித்ததாக சொல்லும் காலக்கட்டத்திற்கு இடையே என்னுடைய உறவினரான ரவிகுமாரை வைத்து பஞ்சாயத்து ஏதுவும் பேசினேனா அல்லது புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. மொத்தம் எத்தனை காசோலை கொடுத்தார் என்றால் ரூ.3 லட்சத்திற்கு ஒரு காசோலையும், ரூ.2 லட்சத்திற்கு ஒரு காசோலையும் கொடுத்தார். ( சாட்சி தற்போது தானாக முதலில் 2 காசோலையை கொடுத்ததாகவும் அதன் பிறகு 10 நிமிடம் கழித்து ரூ.3 லட்சத்திற்கு மற்றொரு காசோலை கொடுத்ததாகவும் மொத்தம் 3 காசோலைகள் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லுகிறார்). என்னிடம் காட்டப்படும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் எதிரி 22.10.2020ம் தேதி அன்று 22.10.2020ம் தேதியிட்ட ரூ.3 லட்சத்திற்கான HDFC வங்கி, கோவை கிளையில் காசோலை எண். 000028 ஒன்றை எதிரி வாங்கி தொகைக்காக என்னிடம் கொடுத்தார் என்றும் மீதி தொகையான ரூ.5 லட்சத்தை 3 மாதங்கள் கழித்து நேரடியாக கொடுப்பதாக வேண்டுகோள் விடுத்தார் என்றும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

8. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் ஒரு காசோலை கொடுத்தாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் ஒரு வாரம் கழித்து காசோலையை போடச்சொன்னதாக தான் சொல்லியுள்ளேன் என்றாலும் காசோலை கொடுக்கும் போதே ஒரு வாரம் கழித்து போடச்சொன்னதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். 28.10.2020ம் தேதி அன்று எதிரி காசோலையை வசூலுக்கு போடச்சொன்னதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி போடச்சொன்ன தேதியில் போட்டேன். காசோலை எந்த காரணத்தினால் திருப்பப்பட்டது என்ற " Payment stopped by Drawer". அதற்கான அர்த்தம் என்னவென்றால் காசோலை கொடுத்தவர் பணத்தை கொடுக்க வேண்டாம் என்று நிறுத்தி வைத்துள்ளார்.

9. எதிரியிடமோ அல்லது என் உறவினரிடமோ காசோலை ஏன் நிறுத்தி வைக்கப்பட்டது என்று கேட்டேனா என்றால் எதிரியிடம் போன் மூலம் கேட்டதற்கு அவர் சரியாக பதில் சொல்லவில்லை. அப்படி என்றால் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எதிரியை நேரடியாக சந்தித்து கேட்டதாக சொல்லும் சங்கதி தவறான சங்கதி என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் போன் மூலம் கேட்டதற்கு சரியான ரெஸ்பான்ஸ் இல்லாததாலும் போனை கட் பன்னிவிட்டதாலும் 3 நாள் விட்டு நேரில் சென்று கேட்டேன். நான் சொல்லுவது போது என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லக்கூடிய சங்கதி இல்லை என்றாலும் உடனடியாக எதிரியை சென்று சந்தித்ததாக தான் உள்ளது என்றாலும் சரிதான்.

10. 04.12.2020 ம் தேதி காசோலையை வசூலுக்கு போடச்சொல்லி எதிரி குறிப்பிட்டு சொன்னதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை

என்றால் சரிதான். 3வது முறை 05.12.2020ம் தேதி காசோலையை தாக்கல் செய்த தேதி அன்று தான் எதிரி தாக்கல் செய்ய குறிப்பிட்டு சொன்னதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன். அவர் சொல்லாமல் நான் காசோலையை வசூலுக்கு போட முடியாது. 3வது முறை காசோலை திருப்பப்பட்ட பிறகு என்னுடைய உறவினர் ரவிகுமாரை அணுகி பேசினேனா என்றால் பேசினேன். அவர் எதிரியிடம் பேசிவிட்டு சொல்லுவதாக 2, 3 முறை சொன்னார். அதன் பிறகு ரவிகுமாரும் போனை அட்டன் பன்னவில்லை.

11. அதன் பின்னிட்டு தான் காசோலை திருப்பப்ப்ட்டதை குறித்து எதிரிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். எதிரியை அறிமுகம் படுத்தியதும், பணம் வாங்கி கொடுத்ததும், ரவிகுமார் என்று சொல்லுவதால் அவருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு நகலை அனுப்பி வைத்தேனா என்றால் இல்லை. ரவிகுமாரை சாட்சியாக விசாரிக்க வேண்டும் என்னுடைய புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியும், ரவிகுமாரும் என்ன தொழில் செய்வதற்காக பணம் வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் கட்டுமான தொழில் செய்வதற்காக பணம் வாங்குவதாக சொன்னார்கள். எதிரிக்கும், ரவிகுமாருக்கும் வியாபார ரீதியாக பழக்கம், வழக்கம் உண்டு என்றாலும் ரவிகுமாருக்கு வியாபார ரீதியாக வரவேண்டிய பணத்திற்காக என்னை வைத்து இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

12. ரவிகுமார் என்பவர் அரசாங்க பணியில் இருப்பதால் வேறு தொழில் எதுவும் பன்ன முடியாது என்ற காரணத்தாலும் காசோலை வழக்கு போட முடியாது காரணத்தாலும் என்னை வைத்து இந்த வழக்கை போட்டுள்ளார் என்றால் சரியல்ல. நான் உண்மையாகவே எதிரிக்கு ரூ.8லட்சம் பணம் கொடுத்துயிருந்தால் எந்த வகையில் பணம் கொடுத்தேன் என்றும் என்னுடைய வழக்கு ஆவணங்களில் சொல்லியிருப்பேன் என்றாலும் சொல்லாததிலிருந்து இது பொய் வழக்கு என்று தெரியவருகிறது என்றாலும் சரியல்ல. நான் சொல்லுவது போல் எதிரி எனக்கு 3 காசோலை கொடுத்துயிருந்தால் 3 காசோலையும் வசூலுக்கு தாக்கல் செய்து வழக்கு போட்டுயிருப்பேன் என்றாலும் 3 காசோலையும் வசூலுக்கு போடத்திலிருந்தும், வழக்கில் காட்டத்திலிருந்தும், இது பொய்யான வழக்கு என்பது தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

13. என்னிடம் எதிரி வாங்காத காரணத்தாலும் நான் பொய்யாக காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தது தெரியவந்ததாலும் தான் எதிரி காசோலையை நிறுத்தி வைத்தார் என்றால் சரியல்ல. எதிரி காசோலையை கொடுக்காத காரணத்தினால் நானே தேதி பூர்த்தி செய்து 3 முறை காசோலையை வசூலுக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் எதிரி என்னிடம் எந்த கடன் தொகையையும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல.
<u>மறுவிசாரணை</u> இல்லை

SRIVASTAVA Digitally signed by SRIVASTAVA